# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக்கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.SA 864/விசாரணை/E/2024</u>**

திரு.Y.அக்பர் அகமது -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
கூடுதல் நேர்முக உதவியாளர்(நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை-1. .. பொது அதிகார அமைப்பு

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 05.01.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், சென்னை மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர்(நிலம்)/பொதுத் தகவல் அலுவலர் 27.02.2026 அன்று நேரில் ஆஜராகி, சென்னை மாவட்ட வருவாய் அலுவலரின் 24.02.2026 தேதியிட்ட அறிக்கைகளை ஆணையத்தின் முன் தாக்கல் செய்ததன் அடிப்படையில், இவ்வாணையத்தால் 24.03.2026 அன்று கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன :-

1. *தகவல் வழங்குவதை பொறுத்தமட்டில், தற்போது பொதுத் தகவல் அலுவலரால் பிரமாண பத்திரம் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. *மேல்முறையீட்டாளர் 12.08.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனு பெறப்பட்ட காலக்கட்டத்தில் பொதுத் தகவல் அலுவலர் பணியிடம் காலியாக இருந்துள்ளதாக மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளபோதிலும், பொதுத் தகவல் அலுவலர் பணியிட பொறுப்பை தகுந்த அலுவலருக்கு வழங்கியிருக்க வேண்டும். ஆகவே, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 30 தினங்களுக்குள், சென்னை மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள், மேல்முறையீட்டாளருக்கு குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தகவல் கிடைக்கப் பெறாமல் காலதாமதமாக தற்போது பிரமாண பத்திரம் வழங்கப்பட்டுள்ளதால், அவருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்காக மேல்முறையீட்டாளருக்கு ரூ.2.000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) பொது அதிகார அமைப்பு வழங்கி, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்தது குறித்த அறிக்கையை ஆணையத்தில் 27.04.2026 அன்று தவறாமல் நேரில் தவறாமல் பொதுத் தகவல் அலுவலர் மூலம் சமர்ப்பிக்குமாறு*

*சென்னை மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. மேற்குறித்த உத்தரவின் அடிப்படையில், சென்னை மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர்(நிலம்) சார்பாக முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி/செல்வி.பிரியங்கா 27.04.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, சென்னை மாவட்ட வருவாய் அலுவலரின் 21.04.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

3. சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் 21.04.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மேல்முறையீட்டாளருக்கு ரூ.2,000/-க்கான வரைவோலை 21.04.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 22.04.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் அதனை 24.04.2026 அன்று பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, மேற்குறித்த கடிதத்தின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் துறையின் Tracking Report-ன் நகல் ஆகியவற்றை இணைத்து சமர்ப்பித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. ஆணையத்தின் 24.03.2026 தேதியிட்ட உத்தரவினை சென்னை மாவட்ட வருவாய் அலுவலரால் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 05.05.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்குஎண்.SA 864/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/
மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-1.

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
கூடுதல் நேர்முக உதவியாளர்(நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-1.

திரு.Y.அக்பர் அகமது,
ப.எண்.113, பு.எண்.257
அமீர் மஹால், பாரதி சாலை,
இராயப்பேட்டை, சென்னை-14.

Copy to: File

RJ/PS